Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 16 2024

திங்கட்கிழமை டிசெம்பர் 16, 2024 | ஒளி: 10 கதிர் 115 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




### ஜனாதிபதி அனுர குமாரவின்

# முதலாவது இராஜதந்திர விஜயம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இந்தியாவுக்கு இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டு ஞாயிற்றுக்கிழமை (15) புறப்பட்டுச்சென்றார். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, மேற்கொள்ளும் முதலாவது இராஜதந்திர விஜயமாகும்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இந்த விஜயத்தின் போது , இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்மு, வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட பல உயர்மட்ட தரப்புக்களுடன் சந்திப்பை மேற்கொள்வார். தொடர்ச்சி P2



## எலிக்காய்ச்சலால் 8 ஆவது மரணம்

யாழில், எலிக்காய்ச்சல் என சந்தேகிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 3 நாட்களாக அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞரொருவர் சனிக்கிழமை (14) உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 5 நாட்கள் காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டு, நோயின் தீவிர நிலை உணரப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட நிலையில் உயிரிழப்பு ஏற்பட்டது. தொடர்ச்சி P2

## சபாநாயகரின் பதவி வெற்றிடமானது

சபாநாயகர் அசோக ரன்வலவின் இராஜினாமாவை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஏற்றுக்கொண்டதாக ஜனாதிபதியின் செயலாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட அசோக ரன்வல தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். தொடர்ச்சி P2



### 2024 இல் அதிகமாக கடன்களை பெற்று

## பெரும் நெருக்கடிக்குள் அரசாங்கம் வீழ்ந்துள்ளதா?

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, அரசாங்கம் கடன்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகியிருந்தன. எனினும் அரசாங்கம் அதிகமாக கடன்களை பெற்றுக்கொள்வதாக சிலர் வாதிடுகின்றனர். அரசாங்கம் கடன்களை பெற்றுக்கொள்வது ஏற்றுக்கொள்ளகூடியது என சிலர் பதிலளிக்கின்றனர். இந்த நிலையில் பெற்றுக்கொள்கின்ற கடன்கள் வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவா, அல்லது நாங்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ள கடன்களை மீள செலுத்துவதற்காகவா என்று முரண்பட்ட கூற்றுக்கள் காணப்படுகின்றன. இலங்கை அரசாங்கம் கடன்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் மூன்று முக்கிய கேள்விகளை FactCheck.lk தெளிவுபடுத்துகின்றது. தொடர்ச்சி P2

## சபாநாயகர் பதவிக்கு சஜித் அணியும் போட்டி

புதிய சபாநாயகரை தெரிவு செய்யும் போது, ஆளும் தேசிய மக்கள் சக்தி சார்பில் ஒருவரின் பெயரை ஆளும் கட்சி முன்மொழிய உள்ள நிலையில் இதற்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் பெயரினை தாங்கள் முன் மொழிய உள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

ஆளும் அரசு தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை சொல்லி மக்களின் வாக்குகளை பெற்றனர்.ஆனால் ஆட்சியின் பின்னர் அவர்களது வங்குரோத்து அரசியலை காணமுடிந்தது.

தூய்மையானவர்கள் என்று தங்களை காட்டியவர்களின் கல்வி நிலை தொடர்பில், சில நாட்களில் எம்மால் காண முடிந்தது.இனியும் இவர்களது பட்டங்களை நம்ப முடியாது. தொடர்ச்சி P2



## ஆளும் கட்சி எம்.பிக்களின் 'தகைமை' அறிய தீர்மானம்

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் உயர் கல்வி தகைமைகள் குறித்து ஆராய்வதற்கு புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்றில் தீர்மானம் ஒன்றை கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளது.

தனது பதவியை 22 நாட்களில் சபாநாயகர் அசோக்க ரன்வல இராஜினாமா செய்தார். அவரது 'கலாநிதி பட்டம்' தொடர்பில் எழுந்த சர்ச்சையை தொடர்ந்தே, அவர் இராஜினாமா செய்தார். இதேவேளை, இவ்வாரம் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ள நிலையிலேயே 'கலாநிதி பட்டம்' சர்ச்சையை கிளப்பியது. தொடர்ச்சி P2

## மீகொட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

மீகொட, நாகஹவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 32 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் தனது சகோதரரின் வீட்டிலிருந்து மீகொடவில் உள்ள தனது சொந்த வீட்டிற்கு சனிக்கிழமை (14), காரில் சென்று கொண்டிருந்த போதே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரை இனந்தெரியாத நபர் ஒருவர் தடுத்து நிறுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். துப்பாக்கிச் சூடு நடந்த போது பாதிக்கப்பட்டவரின் மனைவி மற்றும் ஒன்றரை வயது மகளும் வாகனத்தில் இருந்தனர். தொடர்ச்சி P2

## "தமிழரசுக் கட்சியில் இருந்து சிலர் நீக்கப்படுவார்கள்"

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து சிலர் நீக்கப்படுவார்கள். சிலர் இடை நிறுத்தப்படுவார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் சனிக்கிழமை (14) நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சிக்கு எதிராக போட்டியிட்டவர்களை உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு பொதுச் செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது என மத்திய குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ச்சி P2



## வெள்ளவத்தையில் போதைப்பொருள் விநியோகித்தவர் சிக்கினார்

வெள்ளவத்தை அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருக்கும் பெரும் பணக்காரரர்களின் பாவனைக்காக பாரியளவில் கொக்கெய்ன் மற்றும் குஷ் போதைப் பொருட்களை கடத்தியவர் உட்பட இருவர் மத்திய ஊழல் தடுப்பு அதிரடிப் படை அதிகாரிகளால் சனிக்கிழமை (14) கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ச்சி P2



## புதிய சபாநாயர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரை

'கலாநிதி பட்டம்' தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து, அசோக்க ரன்வல சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். இதனையடுத்து, சபாநாயகர் பதவி வெற்றிடமாக உள்ளது. இந்நிலையில், புதிய சபாநாயகர் பதவிக்கு ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலபத்தி, லக்ஷ்மன் நிபுணராச்சி மற்றும் பிரதி சபாநாயகர் வைத்தியர் மொஹமட் ரிஸ்வி சாலி ஆகியோரின் பெயர்களே பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இதற்கமைய செவ்வாய்க்கிழமை (17) கூடவுள்ள பாராளுமன்ற அமர்வின் போது சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது. பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி, 159 ஆசனங்களை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



PAGE 1 தொடர்ச்சிகள்




# முதலாவது இராஜதந்திர விஜயம்

ஜனாதிபதியுடன் உயர்மட்ட குழுவொன்றும், இந்தியாவுக்கு செல்லும். இதன்போது, இருநாடுகளினதும், பரஸ்பர நலன்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

மன்னாரின் அதானி காற்றாலை மின் திட்டம், இரு நாடுகளுக்கும் இடையே நில இணைப்பு, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ETCA) , பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம், தேசிய அடையாள அட்டைகளை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி, திருகோணமலை பொருளாதார வலயம் உள்ளிட்ட விடயங்கள் இருதரப்பு பேச்சுக்களில் முக்கிய இடத்தை பிடிக்கும என எதிர்பார்க்கபடுகிறது.

மேலும் அரசியல் ரீதியாக, வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மலைநாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதில் அரசாங்கத்தின் முன்னெடுப்புகள் கவனத்தில் கொள்ளப்படும். 13வது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் உள்ளிட்ட விடயங்களில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவதில் புதுடெல்லி கவனம் செலுத்தும்.

இதனை தவிர, இந்திய தேசிய பாதுகாப்பு விடயத்தில் என்றும் போல் புதுடெல்லி இலங்கை தரப்புடன் கலந்துரையாடும். இந்தியாவின் தெற்கு கடல் பகுதியில் நம்பகமான பாதுகாப்பு பங்காளியாக இலங்கை இருக்க வேண்டும் என்பதே புதுடெல்லியின் எதிர்பார்ப்பாகும். இதற்கான மூலோபாய உத்திரவாதத்தை முன்னிறுத்திய பேச்சுவார்த்தைகளில் புதுடெல்லி ஆர்வம் செலுத்தும் என்றும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.



# எலிக்காய்ச்சலால் 8 ஆவது மரணம்

எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், இதற்கு முன்னர் ஏழுபேர் மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சபாநாயகரின் பதவி வெற்றிடமானது



அரசியலமைப்பின் 64(2) யாப்புக்கு அமைய சபாநாயகர், பிரதிசபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய எந்தவொரு பதவியிலிருந்தும் இராஜினாமா செய்வதாயின், அது தொடர்பாக சுய கையொப்பத்துடனான கடிதம் மூலம் ஜனாதிபதிக்கு அறிவிக்கவேண்டும்.

அதற்கமைய, ஜனாபதியின் செயலாளரினால் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு இந்த எழுத்துமூலமான அறிவித்தல் மேற்கொள்ள ப்பட்டுள்ளது.

# மீகொட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர்...

பலத்த காயங்களுக்கு உள்ளான நபர் ஹோமாகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், மீகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# "தமிழரசுக் கட்சியில் இருந்து சிலர்...

அதனைப் பொதுச்செயலாளர் எதிர்வரும் நாட்களில் செய்வார்.

வேறு சிலர் கட்சிக்கும், கட்சியினுடைய வேட்பாளருக்கு எதிராகவும் செயற்பட்டமை தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரைக்கும் அவர்கள் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து இடை நிறுத்தப்படுவார்கள்.

கடந்த காலத்தில் அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமான விடயங்களில் தமிழரசுக் கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம். ஆகவே. அது எங்களுடைய நிலைப்பாடு என்றார்.

இதேவேளை, வவுனியாவில், உள்ள தனியார் விடுதியொன்றில், சனிக்கிழமை (14) நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் போர்களமாக மாறியது. மாவை சேனாதிராஜா வந்த பின்னர் கூட்டத்தை ஆரம்பிக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கோரியமையால் கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சபாநாயகர் பதவிக்கு சஜித் அணியும் போட்டி

எனவே தான் எமது அணியில் உள்ள தகுதிமிக்க ஒருவரை சபாநாயகர் பதவிக்கு பிரேரணை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# பெரும் நெருக்கடிக்குள் அரசாங்கம் வீழ்ந்துள்ளதா?

கேள்வி - 01: அரசாங்கங்கள் ஏன் கடன்களை பெறுகின்றன?

அரசாங்கங்கள் மூன்று பிரதான காரணங்களுக்காக கடன்களை பெறுகின்றன. முதலாவதாக பிரதான நிதி பற்றாக்குறையை நிவரத்தி செய்வதற்கு. இரண்டாவது கடன்கள் மற்றும் வட்டியை செலுத்துவதற்கு. மூன்றாவதாக முதிர்வு கடன்களை அடைப்பதற்கு.

அரசாங்கம் ஒன்று நிறைவேற்றவேண்டிய இந்த மூன்று காரணங்களையும் ஒன்றாக உற்றுநோக்குவோமாயின் அதுவே ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டிய கடனின் மொத்த மதிப்பு ஆகும். இதனையே GFN (Gross Financing Need) மொத்த நிதித்தேவை என அழைக்கின்றோம்.

கேள்வி - 02: 2024 ஆம் ஆண்டு அரசாங்கம் கடனாக பெற்றுக்கொள்ளவிருந்த தொகை எவ்வளவு?

GFN (Gross Financing Need) க்கு அமைய FactCheck.lk இன் கணக்கீட்டிற்கு ஏற்ப 2024 ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டிய கடனின் தொகையானது 3,670 பில்லியன் ரூபாவாகும்.

கேள்வி - 03: 2024 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் கடனானது எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட அதிகமானதா?

அரசாங்கம் தனது வரவு செலவு திட்டத்தில் பின்வரும் தேவைகளுக்காக வரையறைகளை விதிக்கின்றது.

(1) மொத்த நிதித்தேவை மற்றும்,

(2) கடனின் அளவு அதிகரிப்பு - குறித்த நேரத்தில் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள கடனின் மொத்த தொகை.

அரசாங்கம் வரையறைக்கு அப்பால் சென்று கடன் பெற்றுக்கொண்டுள்ளதா அல்லது பெற்றுக்கொள்ளவில்லையா என்பது தொடர்பில் ஆராயப்படும். 2024 ஆம் ஆண்டுக்காக வரையறுக்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் தேசிய ரீதியாக அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடன் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு மேற்குறிப்பிட்ட விடயம் ஆராயப்படும்.

மொத்த நிதித்தேவையை (GFN) சரிபார்த்தல்

2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடுகளுக்கு (BE24) அமைய, நடப்பு நிதியாண்டுக்காக அரசாங்கம் நிர்ணயித்த மொத்த நிதித் தேவையின் எல்லையானது 3,670 பில்லியன் ரூபாவாகும். நிதியமைச்சின் தரவுகளுக்கு அமைவாக கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் அரசாங்கத்தினால் 1,903 பில்லியன் ரூபாய் கடனாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வரையறையை அதாவது 3,670 பில்லியன் ரூபாவினை பெற்றுக்கொள்வதற்கு ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் மேலும் 1,766 பில்லியன் ரூபாவினை கடனாக பெறும் தகுதி அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது.

ஒக்டோபர் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள கூடிய கடன் அளவினை Factcheck.lk மதிப்பாய்வு செய்துள்ளது. அதற்கமைவாக குறித்த காலப்பகுதிக்குள் அரசாங்கம் பெற்றுக்கொள்ள கூடிய கடனின் அளவு 1,612 பில்லியன் ரூபாவாகும்.

இந்த கடன் தொகையானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1,766 பில்லியன் ரூபாவினை விட குறைவான தொகையாகும். அது மாத்திரமின்றி வரவு செலவு திட்டத்தின் வாயிலாக வரையறுக்கப்பட்ட தொகைக்குள் இது அடங்கும். BE24 உடன் ஒப்பிடுகையில் T-பத்திரங்கள் (T-bonds) மீதான வட்டி செலுத்துதல் குறைக்கப்பட்டதன் காரணமாக குறைவான கடன் தேவை என கருத முடியும்.

முடிவு: 2024 ஆம் ஆண்டின் ஒட்டு மொத்த நிதித் தேவைக்காக வரவு செலவு திட்டம் வரையறுத்துள்ள கடன் வரம்பினை மீறி மேலதிகமாக கடன்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்க முடியாது.

கடன் பிரிவுகளை (DS) சரிபார்த்தல்

மொத்த நிதி தேவை வரம்பிலிருந்து, திருப்பி செலுத்த எதிர்பார்க்கப்படும் கடனை கழிப்பதன் வாயிலாக அரசாங்கம் கடன் அதிகரிப்பில் எதிர்பார்க்கப்படும் வரம்பினை தீர்மானிக்க முடியும்.

முதிர்ச்சியடைந்த கடனை செலுத்துவதற்காக அரசாங்கம் கடனை பெற்றிருந்தால் கடன் பிரிவுகளில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்காது. எனினும் வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் கடனை பெற்றுக்கொள்ளுமாயின் அது கடன் பங்கின் அதிகரிப்பிற்கு வழிவகுக்கும்.

2024 ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடுகளுக்கு அமைய, துண்டு விழும் தொகையானது 2,401 பில்லியன் ரூபாவாக அமையும் என அரசாங்கம் கணித்துள்ளது. அந்த வகையில் கடன் பிரிவுகளிலும் (DS) சமமான அதிகரிப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் கடன் பங்கானது 965 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அதாவது, ஒக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலக்கட்டத்தில் DS ஐ அதிகரிப்பதற்கான வரவு செலவுத் திட்ட வரம்பிற்குள் அரசாங்கத்திடம் இன்னும் 1,445 பில்லியன் ரூபாய் உள்ளது.

வரவு செலவு திட்டத்தின் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கும் தேவையான நிதித்தேவையை ஈடுசெய்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் வரவுசெலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒக்டோபர் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான வரவு செலவு திட்டத்தில் எஞ்சியிருக்கும் 1,445 பில்லியன் ரூபாவில் 1,030 பில்லியன் ரூபாவை உள்நாட்டு கடன் வாயிலாகவும், 415 பில்லியன் ரூபாவினை வெளிநாட்டு கடன் வாயிலாகவும் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒக்டோபர் முதல் நவம்பர் வரை உள்நாட்டு கடன் பங்கானது 371 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. டிசெம்பர் மாதத்திற்கான வரவு செலவுத் திட்டத்தின் தேசிய நிதி வரம்பு 659 பில்லியன் ரூபாய் ஆகும். அந்த வகையில் 659 பில்லியன் ரூபாய் கடனை பெற்றுக்கொள்ள அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

முடிவு: டிசெம்பர் மாதத்திற்குள் குறித்த தொகையினை கடனாக பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் காணப்படுவதால், 2024 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு கடன் வரவு செலவு திட்டத்தின் வரம்பிற்குள் காணப்படுகின்றமை தெளிவாக புரிகின்றது.

ஒட்டுமொத்த நிதித்தேவை மற்றும் கடன் பங்கு அதிகரிப்பு தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டுபாடுகள் குறித்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை கவனத்தில் கொள்ளும் போது 2024 ஆண்டிற்காக மேலதிகமாக கடனை பெற்றுக்கொள்ள வேண்டிய அபாயம் அரசாங்கத்த்திற்கு இல்லை என்பது தெளிவாக புரிகின்றது.

# ஆளும் கட்சி எம்.பிக்களின் 'தகைமை' அறிய தீர்மானம்


இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சபாநாயகராக பதவி வகித்த அசோக்க ரன்வல உட்பட அனைத்து அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கலாநிதி பட்டங்கள், பொறியிலாளர் பட்டங்கள், வைத்திய கலாநிதி பட்டங்கள் போன்றவை குறித்து ஆராய்வதற்கு தெரிவுக்குழு அமைக்கும் யோசனையை பாராளுமன்றத்தில் கொண்டு வர புதிய ஜனநாயக முன்னணி தீர்மானித்துள்ளது.


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வியாழக்கிழமை (12) இடம்பெற்ற இந்த கூட்டத்தில் இவ்வாரத்தில் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் உயர் கல்வி தகைமைகள் குறித்து ஆராய்வதற்கான யோசனையை முன்வைக்க தீர்மானிக்கப்பட்டது.


# வெள்ளவத்தையில் போதைப்பொருள் விநியோகித்தவர் சிக்கினார்

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 6 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 40 கிராம் கொக்கெய்ன் மற்றும் 206 கிராம் குஷ் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அதே போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த பதினெட்டு இலட்சத்து 75,000 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது என மத்திய ஊழல் தடுப்பு அதிரடிப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது சிறையில் இருக்கும் போதைப்பொருள் வியாபாரி ஒருவரால் இந்த போதைப்பொருள் கடத்தல் நடத்தப்பட்டு வருவதாகவும், கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரி நாடு முழுவதும் உள்ள பிரபல இரவு விடுதிகளுக்கும், உயர்மட்ட வேலைகளில் பணிபுரியும் பணக்காரர்களுக்கும் போதைப்பொருள்களை மிகவும் ரகசியமாக விநியோகித்து உள்ளார். அத்துடன், தனியார் பல்கலைக்கழகங்களில் படிக்கும் பெரும் பணக்காரர்களின் பிள்ளைகளுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.






## சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பம்

■ ரஞ்ஜித் ராஜபக்ஷ

2024–2025 ஆம் ஆண்டிற்கான சிவனொளிபாத மலை பருவகாலம் சனிக்கிழமையுடன் (14) ஆரம்பமானது.


பெல்மடுல்ல கல்பொத்தாவெல ரஜமஹா விகாரையில் இருந்து இரத்தினபுரி, அவிசாவளை – ஹட்டன் வீதியூடாகவும் , பலாங்கொட – பொகவந்தலாவ வீதியூடாகவும் , இரத்தினபுரி – பாலபத்தல மற்றும் ரஜமாவத்தை வீதியூடாகவும் சனிக்கிழமை (14) அதிகாலை சமன்தேவ சிலை , கரவுசதாதுக கரடுவ, மற்றும் தேவ ஆபரணங்கள் சிவனொளிபாத மலையின் மேல் தளம் நோக்கி கொண்டு செல்லப்பட்டு சமய வழிபாடுகள் இடம்பெற்றதுடன் பருவகாலம் ஆரம்பமானது.











பெண்களுக்கு எதிரான வன்முறைகளை

# “நிறுத்த உதவுங்கள்”

■ ஏ.எச் ஹஸ்பர்

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, ஏற்றுக்கொண்ட சீடோ சமவாயத்தின் அடிப்படையில் புதிய சட்டமூலத்தை கொண்டுவருவதன் ஊடாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் பாரபட்சங்களையும் நிறுத்த உடனடியாக உதவுங்கள் என கிழக்கு மாகாண பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அமைப்பு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

திருகோணமலையில் சனிக்கிழமை (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இந்த அமைப்பினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் போது அவர்கள் மேலும் கூறுகையில்,

இலங்கையின் அனைத்து பெண்களும் இன, மத, சமூக வேறுபாடுகளை கடந்து ஆணாதிக்க அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.



ஆணாதிக்க மயப்பட்ட குடும்ப, சமூக, வேலைத்தள, அரச அடக்குமுறைகளுக்கு இலங்கைப் பெண்கள் அனைவரும் உள்ளாகின்றனர். இணையவழிக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் இம்சைகள், வன்முறைகளால் சிறுமிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனினும் காத்திரமான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் தவறு செய்கிறவர்கள் தப்பித்துக் கொள்கின்ற நிலைதான் தற்போதும் இருக்கிறது.

இருந்த போதும், கடந்த 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 15 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய 41 வயதான நபருக்கு 30 வருட கடூழிய சிறை தண்டனை விதித்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் கடந்த 11 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியதை எமது கிழக்கு மாகாண பெண் மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு வரவேற்கிறது.

இலங்கையில் இடம்பெறுகின்ற பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்துவதற்கான சட்டங்களை விரிவுபடுத்துவதுடன், சட்டங்களில் சீர்திருத்தங்களை உடன் மேற்கொண்டுதவுமாறும், அத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான எல்லா விதமான பாரபட்சங்களையும் இல்லாது ஒழிக்கும் (சீடோ) சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முழுமையாக இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக புதியதொரு சட்ட மூலத்தை உருவாக்குமாறும், இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு இடம்பெறும் விசாரணைகளை உடன் நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறும், மேலும் அரசுக்கு எதிரான குற்ற செயல்களை கையாள்வதற்கு போதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக புதிய பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தனர்.

## ஊடகவியலாளர் பைஷலுக்கு “சாஹித்ய மாகாண விருது”



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நாடாத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு மாகாண இலக்கிய விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சமூக விஞ்ஞானம் (ஆயுள்வேதம்) “சாஹித்ய மாகாண விருது” வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜி. திசாநாயக்க தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் புதன்கிழமை (11) இடம்பெற்ற இவ்விழாவின்போது கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம், சான்றிதழ் மற்றும் காசோலை போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளை வழங்கும் நோக்கில், துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ ஆக்கங்களை “நலன் தரும் மருத்துவம்” என்ற பெயரில்,

சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில்

தொகுத்து வெளியீடு செய்திருந்தார்.

அந்நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு “சமூக விஞ்ஞானம்” (ஆயுள்வேதம்) “சாஹித்ய மாகாண விருதை வழங்கி கௌரவித்தனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க ஆகியோருடன் கௌரவ அதிதிகளாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மகனின் தாக்குதலில் தாய் மரணம்

மகனின் தாக்குதலில் 82 வயதுடைய தாய் ஒருவர் உயிரிழந்த சம்பவம் இரத்தினபுரி, கொடகவெல, பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்று ள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கபுமல் தெனிய பிரதேசத்தை சேர்ந்த, பொடி நோனா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக 50 வயதுடைய மகன் கூரிய ஆயுதத்தால் தனது தாயின் தலையில் அடித்ததால் அவர் உயிரிழந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மருதானையில் துப்பாக்கிச் சூடு: பெண் காயம்

மருதானை மாளிகாகந்த நீதிமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், கொழும்பு- 13 யைச் சேர்ந்த 40 வயதான பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என மருதானை பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையின் பிரகாரம், கரையோர பொலிஸாரினால் இரண்டு பெண்கள், சனிக்கிழமை (14) கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவ்விருவரும் மாளிகாந்த நீதவான் முன்னிலையில், சனிக்கிழமை (14) ஆஜர்படுத்தப்பட்டனர். அங்கு வந்த பெண்ணொருவரின் கணவன், அப்பெண்ணை பிணையில் எடுத்தார். அதன் பின்னர், அங்கிருந்து கணவனுடன் வெளியேறிய போதே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் துப்பாகிப்பிரயோத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவித்த மருதானை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனவரியில் மீள ஆரம்பம்

■ நிதர்ஷன் வினோத்

காங்கேசன்துறைக்கும் நாகைப்பட்டினத்துக்கும் இடையிலான படகு சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வாரத்திற்கு ஆறு நாட்கள் மேம்பட்ட வசதிகளுடன் ஆரம்பமாகவுள்ளதாக சுபம் குழுமத்தின் தலைவரும், காங்கேசன்துறை, நாகப்பட்டினம் படகு சேவை முதலீட்டாளருமான பொன்னுசாமி சுந்தர்ராஜ் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் சனிக்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ இந்தியாவில் சுபம் குரூப் ஒப் கம்பெனிஸ் பல்வேறு வியாபார நிறுவனங்களை உள்ளடக்கியதொன்றாகும். குறிப்பாக, தனிமனிதனின் தலைமைத்துவத்தில் 500 இற்கும் மேற்பட்ட பாரவூர்தி போக்குவரத்து சேவையை வழங்குவதாக இருக்கின்றது.

அத்துடன் எமது பிறதொரு நிறுவமான சுபம் நிறுவனம் காங்கேசன்துறை, நாகப்பட்டினத்துக்கு இடையிலான படகு சேவையில் முதலீடுகளைச் செய்துள்ளது. இதையடுத்து கடந்த ஆகஸ்ட் மாதம் இந்த படகு சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் காலநிலை முன்னெச்சரிக்கையின் காரணமாக தற்காலிகமாக சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 23 ஆம் திகதி வங்களா விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக்குவதற்கான நிலைமைகளும் உள்ளன. இதனால் 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியிருந்த படகு சேவையை சிறிய காலத்திற்கு ஒத்திவைத்துள்ளோம்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரியில் மீண்டும் காங்கேசன்துறைக்கும் நாகைப்பட்டினத்துக்கும் இடையிலான படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதோடு இதனை சுபம் நிறுவனம் நேரடியாக கையாளப்படுகின்றது.




நாங்கள் படகு சேவையை கடந்த மூன்று மாத காலத்தில் முன்னெடுத்த போது சிறுசிறு சறுக்கல்களும் காணப்பட்டுள்ளன. எனினும் அனைத்து தரப்பினரினதும் ஒத்துழைப்புக்களுடன் சிறப்பாக எமது சேவையை கடந்த காலத்தில் முன்னெடுக்க முடிந்திருந்தது.

மீள படகு சேவை ஆரம்பிக்கப்படும்போது, சில மேம்பட்ட வசதிகளை முன்னெடுத்துள்ளோம். முக்கியமாக சுற்றுலா பயணிகளை அதிகரிக்கும் நோக்கத்தில் பயணக்கட்டணங்களை மாற்றியமைத்துள்ளோம்.

# சோகங்களை மறந்து விடுவது அடிக்கடி நடக்கிறது

வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறி, எச்சரிக்கை விடுத்துள்ளது. அதை, அந்தந்த பிரதேசங்களில் வசிப்போர், தங்களுடைய பிரதேசங்களுக்கு அப்பால், செல்வோரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லையேல், அனர்த்தங்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாகாண மக்களை உடனடியாக அப்பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு பிரகடனங்களை வெளியிடுவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அந்த அனர்த்தத்தின் போது மிகவும் அநாதரவாகிவிட்ட மக்கள் இவ்வாறான கருத்துக்களை கேட்கும் திறன் கொண்டவர்கள் அல்ல.

அந்த பேரழிவை எதிர்கொண்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்த பிறகு வானிலை அறிக்கைகளை கேட்பதை விட தங்கள் உயிரையும் உடைமைகளையும் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். இந்த காரணத்திற்காக, வானிலை ஆய்வு மையம் குறைந்தபட்சம் சில மணிநேரங்களுக்கு முன்னதாகவே எந்த ஆபத்து எச்சரிக்கையையும் வெளியிடும் திறன் பெற்றிருக்க வேண்டும். தற்செயல் நடவடிக்கைகளுக்குத் தயார்படுத்தவும் இது பேரிடர் மேலாண்மை மையத்திற்கு உதவுகிறது.

நம் நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியின் போது, இயற்கைப் பேரிடர் என்பது 'மரணத்திற்கு மரணம்' வேலை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன், இடம் இழக்கும் குழந்தைகளின் குடும்பங்களுக்கு உணவு, பான நிவாரணம் மற்றும் மாற்றுத் தங்குமிட வசதிகள் செய்து தருவது அவசியம். கூடுதலாக, சேதங்களுக்கு இழப்பீடும் தேவைப்படுகிறது.

ஒரு சிலருக்கு இதையெல்லாம் செய்வது கடினம் அல்ல, ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கில் மாறும் போது, நாட்டிற்கு இது மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடி. மழை நின்று வானம் வெளுத்து வாங்கும் போது பல சோகங்களை அதிகாரிகள் மறந்து விடுவது அடிக்கடி நடக்கிறது.

நாட்டின் உட்கட்டமைப்பை கவனிக்கும் மிகப்பெரிய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அரசியல் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளமை நிலைமையை மேலும் சிக்கலாக்குவதற்கு வலுவான காரணமாகும்.

பல வருடங்களாக இயங்காமல் இருந்த உள்ளூராட்சி நிறுவனங்களை அந்த மாநிலத்திற்கு கொண்டு வருவதற்கு உழைத்த அனைத்து அரசியல் தலைவர்களும் இந்த விடயத்தில் பொறுப்பு கூற வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள், நகர சபைகள் மட்டுமன்றி மாநகர சபைகளிலும் மக்கள் பிரதிநிதிகள் இருந்திருந்தால் இது போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் நிவாரணமாக இருந்திருக்கும். பேரிடர் மேலாண்மை மையங்களை ஒருங்கிணைப்பதில் கூட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருந்தால் பெரும் வசதியாக இருக்கும்.

அரசியல் ஆதாயங்களுக்காக உள்ளூராட்சி அமைப்புகளை செயலிழக்கச் செய்வதால் பாதிக்கப்படுவது சாமானியர்களே என்பது மிகப்பெரிய சோகம். இயற்கை அனர்த்தங்களினால் அதிகம் பாதிக்கப்படுவது குறைந்த வருமானம் பெறுபவர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் விரைவில் நிவாரணம் வழங்க அதிகாரிகளுக்கு நினைவூட்டுவோம். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதைப் பற்றி பேசும் நாட்டில், துல்லியமான முன்னறிவிப்புச் செய்வதற்கு எதிர்காலத்திலாவது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்நிலைப்பாடு

**லக்ஸ்மன்**

வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய அரசியல் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) - தேசிய மக்கள் சக்தியின் மாற்றம் எனும் அலையில் அடிபட்டுப் போனதைப் பற்றி இன்னமும் சிந்திக்காத தமிழ்த் தேசிய அரசியல் கட்சியினர் இப்போதும் தமது வெறுப்புணர்வுகளையும், வெப்புசாரங்களையும் கோப தாபங்களையும், இறுமாப்புகளையும், வெட்டுக்குத்துக்களையுமே வெளிப்படுத்திவருகின்றனர். இது தமிழர்களின் அபிலாசை நிறைவேற்றத்துக்கு எதிரான நிலைமையையே மேலும் வலுப்படுத்தும் என்பதனை மறந்தும் விடுகிறார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் ஆயுத யுத்தம் ஆரம்பித்த காலம்முதல் தம்மையும் தம்முடைய எதிர்காலத்தையும் மக்களுக்காகவும் தமிழர் தேசத்துக்காகவும் அர்ப்பணித்து தம்முடைய எதிர்காலங்களையே வீணாக்கிக் கொண்ட, ஆயுத இயக்கங்களின் அரசியல் கட்சிகளும் அவர்களை ஆயுதப் போராட்டத்துக்குள் கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்த கட்சியினரும் எதிர் எதிர் அணிகளாக நின்றனர்.

இந்தக் களத்தில் மக்கள் ஆயுதக் களத்துக்குள் கொண்டுவந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கின்றனர். அதுவும் தேசியத்துக்காக முன்னுரிமை கொடுக்கும் கிழக்கு தங்களது பங்கினை முழுக்கச் செய்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். மறுபுறம் வடக்கு சற்று வித்தியாசமாக தேசிய மக்கள் சக்தியின் அலையில் அடிபட்டு பெரும்பான்மையானவர்களையும் தங்களுடைய மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காக ஒருவரையும் கொண்டு வந்திருக்கின்றனர். இதில் அவர்கள் ஏன் இவ்வாறான முடிவொன்றினை எடுத்துக் கொண்டார்கள் என்பதற்கான சரியான பதில்கள் இதுவரை தெரியவில்லை. இருந்தாலும் தமிழ்த் தேசிய அரசியல் மீதான வெறுப்பு, சலிப்பு, இயலாமை போன்ற பல காரணங்கள் இருப்பதாகக் கொள்ள முடியும்.

இவ்வாறான நிலையில், சனிக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் "கட்சிக்கு எதிராக போட்டியிட்டவர்களை உடனடியாக கட்சியிலிருந்து நீக்குவதற்கு பொதுச் செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது என மத்திய குழு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதனை பொதுச்செயலாளர் எதிர்வரும் நாட்களில் செய்வார். வேறு சிலர் கட்சிக்கும், கட்சியினுடைய வேட்பாளருக்கு எதிராகவும் செயற்பட்டமை தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரை அவர்கள் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து இடை நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்திருக்கிறார். அதே நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் பேச்சாளருமான ஞா.சிறிநேசன் கடந்த தேர்தலில் கட்சியிலிருந்து விலகிச் செயற்பட்டவர்களை கட்சியிலிருந்து நீக்குவது குறித்து ஏகமானதாக தீர்மானிக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இது இவர்களுக்குள் இருக்கின்ற பிரச்சினைகள் தீரவில்லை. மேலும் மேலும் வலுவடைந்துகொண்டிருக்கின்றது என்பதனையே காட்டுகிறது. தங்களுடைய தலைவர் பதவிப்பிரச்சினைக்கே முடிவுகளை எட்டிக் கொள்ளாத கட்சியொன்றையே தமிழர்கள் தம்முடைய அரசியல் நிறைவேற்றத்துக்கான கட்சியாக தொடர்ந்தும் கொண்டிருக்கவேண்டும் என்ற நிலைப்பாடு இலங்கைத் தமிழரசுக்கட்சியிடம் இருக்கிறது என்பது இந்த இடத்தில் கவனிக்கப்படவேண்டும். மட்டக்களப்பில் மாத்திரம் 3 ஆசனங்களைப் பெற்றுவிட்ட இறுமாப்பொன்றுடன் தமிழர்களின் அரசியலுக்கான தரப்பாக இலங்கை தமிழரசுக்கட்சியை கொள்ளவேண்டும் என்பதற்கு மாறான நிலைப்பாடும் வடக்கு கிழக்கில் இருக்கிறது என்பதனை அக்கட்சி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதும் கட்டாயமாகும். இதற்கு தேசிய மக்கள் சக்தி மாத்திரம் காரணமல்ல.

வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் போராட்ட இயக்கங்களிடையே இருந்த ஒற்றுமைச் சீர்குலைவை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட அப்போதைய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்த்துவைப்பது நாமாக இருக்கவேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டுக்கு ஒத்த நிலைப்பாடு ஒன்றினையே எடுத்திருந்தன. மற்றும் இந்தியா தமக்கு ஏற்ற நிலையொன்றினை உருவாக்கிக் கொண்டது. அதே நேரத்தில், அண்டை நாடான இலங்கையில் இருக்கின்ற பிரச்சினையை தமக்குச் சாதகமான அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டது. இது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையுடன் மாற்றம் கண்டிருந்தது. விடுதலைப்புρலகளின் அழிவுக்கும் காரணமானது.

போராட்ட இயக்கங்களை ஜனநாயக அரசியலுக்குள் கொண்டுவரும் முயற்சியில் பெரும்பாலான இயக்கங்கள் இந்தியாவால் இழுக்கப்பட்டன. அதுவும் சகோதர இயக்கங்களுக்கு இடையிலான முறுகலை மேலும் வலுவடையச் செய்தது, இது ஒரு வகையிலான தமிழர்களின் போராட்டத்தினை வலுவிழக்கச் செய்வதாகவே இருந்தது. படி நிலைகளாக பல தோல்விகளை தமிழர் போராட்டம் கண்டுகொண்டே வந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரேயே ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியின் தலைவரை டெல்லிக்கு அழைத்து இந்தியா பேசியது. இதுவும் இந்தியாவின் தோல்வியே. சிறு நாடி பிடிப்புக்காக இந்தியா முயன்றிருந்தாலும் பிள்ளையார் பிடிக்கப்போய் வீணான கதையாக அது மாறி அனுரகுமhர திசநாயக்க ஜனாதிபதியானார். அடுத்து நாடாளுமன்றத் தேர்தலில் அவருடைய கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கும் வந்தது.

அனுரகுமாரவை இந்தியாவுக்கு அழைத்ததன் காரணமாக சிங்கள மக்களிடம் ஏற்பட்ட தேசிய மக்கள் சக்தி மீதான எழுச்சியினை அவதானித்த இந்தியா, தங்களது பிழையை மறைத்துக் கொள்ள அல்லது சரிசெய்ய ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கும் முடிவினை எடுத்தது. இந்த முடிவில் இலங்கைத் தமிழரசுக்கட்சி இணங்கிய போதும் ஏனைய தமிழ் அரசியல் தரப்பினர் இணக்கம் கொள்ளவில்லை. அவர்கள் தமக்கான தனி வழியாக தமிழ்ப் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்திக் கொண்டனர். அதில் அவர்கள் எதிர்பார்த்தளவுக்கு வாக்கினையும் பெறவில்லை என்பது வேறுகதை. அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மேலாதிக்க அடக்குமுறையின் காரணமாக வெளியில் நிறுத்தப்பட்ட கட்சிகள் தனிவழியில் தேர்தலில் போட்டியிட்டவேளை இந்தியா அவர்களைக் கைவிட்டதென்றே சொல்லவேண்டும். அதே வழியில் தமிழ் மக்களும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டினையும் செயற்பாட்டினையும் சரியாக அறிந்து கொள்ளாமல் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக இருந்த போராட்ட இயக்கங்களின் அரசியல் கட்சிகளைத் தோற்கடித்தனர்.

அந்தவகையில் இலங்கையின் தேசிய அரசியல் கட்சிகளும் சிங்கள அரசியல்வாதிகளும், அடிப்படைவாதிகளும் எதிர்பார்க்கின்ற போர்க் குணமற்றவர்களையும் வரலாறு அறியாதவர்களையும், பட்டறிவுகளில்லாதவர்களையும் இப்போது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளாக (நாடாளுமன்ற உறுப்பினர்கள் ) மக்கள் களத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது நீண்டகாலத்தில் நடைபெறாமல் தடுக்கப்பட்ட விடயமே.

தமிழ்த் தேசிய அரசியலின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுபவர்களாக போராட்ட இயக்கங்களின் தரப்பாகவே இருந்து வந்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் அவ்வாறே நடைபெற்றிருந்தது. இப்போதும் ஒற்றுமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவர்களும் அவர்களாகவே இருக்கின்றனர். படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் தராக்கி டி.சிவராம், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் போன்றோரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் ஆரம்ப முயற்சியில் இருந்தார்கள். இவைகளெல்லாம் மறக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய அரசியல் புனையப்படுவது தமிழர்களின் அரசியல் பிழையே.

இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கான தீர்வாக வெறுமனே அரசியலமைப்புத் திருத்தம் தீர்வாக அமைந்துவிடும் என்கிற கருத்துநிலைப்பட ஒருபக்கம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் கடந்த காலத்தில் நடைபெற்ற அரசியலமைப்பு உருவாக்கம் சம்பந்தமான விடயங்களில் ஒரு இறுதிநிலை எட்டுகின்ற வேளைகளில் நடைபெறுகின்ற எரிப்பு, கிழித்தெறிதல் போன்ற குழப்பங்கள் பட்டறிவுகளாகவே இருக்கின்றன.

புதிய அரசியலமைப்பு உருவாக்க விடயத்தில் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக வரைபு உருவாக்கத்தில் பங்களிப்பு செய்திருந்த போதிலும் தனியே தமிழரசுக்கட்சியே மேற்கொண்டது என்றே சுமந்திரன் கருத்துக்களை முன்வைக்க முனைவதும் அதனை ஏனையவர்கள் ஆமோதிக்க முனைவதும் அரசியல் நாகரீகமற்ற செயலாகவே இருக்கிறது எனலாம்.



## வாழ்வியல் தரிசனம்

நம்மவர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி, அந்நிய நாடுகளுகளுக்குச் சென்று, அங்கேயே வாழ்வதால், வாழ்க்கையின் நடைமுறைகள், கலாசாரங்கள் மாறிவிடுகின்றன.


சிலர், தமது தாய் மொழியை கொச்சையாக பேசி, தாம் குடியேறிய நாடுதான் தமது தாய்நாடு போல தங்களை மாற்றி விடுகிறார்கள். அவர்களின் பிள்ளைகளும் தமது தாய் மொழியின் வனப்பு, பேச்சின் தன்மை எதுவும் புரியாது, குடியேறிய நாட்டின் மொழியே தமது தாய்மொழி என எண்ணிக் கொள்கிறார்கள்.

தாய் நாட்டுக்கு வந்தால், பேரன், பேத்தியுடன் தாய்மொழியில் பேச முடியாது போக, பெற்றோர் மொழி பெயர்ப்பாளராக மாறிவிடுகின்றனர்.

தான் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமாகவும் அந்த நாட்டின் மொழியை கசடறவும் கற்று பேசவும் வேண்டும். அதற்காகத் தாய் மொழியை மறந்து விட வேண்டுமா? தாய் மொழியை ஒரு போதும் மறவாதீர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### மத்திய நிலையத்தை திறக்கவும்

புதிதாக அமைக்கப்பட்ட, வவுனியா பொருளாதார மத்திய நிலையம் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக திறக்கப்படாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை பகிரங்க கேள்வி கோரல் மூலம் வழங்கி அதை திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, 295 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம், வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக்குளத்தில் அமைப்பதா? என்ற இழுபறிகளுக்கு மத்தியில் மூன்று முறிப்பு பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையமானது இதுவரை திறக்கப்படாத நிலையில் கட்டிடம் சேதமடையும் நிலையில் காட்சி அளித்து வருகிறது.

இதேவேளை தற்போது வவுனியாவில் உள்ள மொத்த மரக்கறி கொள்முதலாளர்கள் சர்வாதிகார போக்குடன் செயல்படுவதாகவும் 10 சதவீதம் என்ற தரகுப்பணம் பெறும் நிலை காணப்படுவதோடு சில வேளைகளில் பொருட்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகளிடம் பணம் வழங்கப்படாத சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே, பகிரங்க கேள்விக்கோரலுக்கு உட்படுத்துகிற போது விவசாயிகளின் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரும் புதிய அரசாங்கமும் ஆவண செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

க. அகரன்

### 1.5 மில்லியன் பயனாளிகளைக்

# Combank Digital கடந்துள்ளது

இலங்கையின் கொமர்ஷல் வங்கியானது தனது டிஜிட்டல் புரட்சியில் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது, வங்கியின் ஓம்னி - ஊடக டிஜிட்டல் வங்கித் தளமான ‘கொம்பேங்க் டிஜிட்டல்’ - 1.5 மில்லியன் பதிவு செய்யப்பட்ட பயனாளிகளை கடந்துள்ளது.



விருது பெற்ற இந்த தளமானது, சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் (SME) மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் ஊடகமாக இலங்கையின் வங்கித் துறையில் டிஜிட்டல் மாற்றத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் ‘இயல்புநிலை டிஜிட்டல்’ வணிக மாதிரியால் உந்தப்பட்டு, ComBank Digital தற்போது ஒரு மாதத்திற்கு 5 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் 45% டிஜிட்டல் ஊடுருவல் மற்றும் 48 மில்லியன் வாடிக்கையாளர் தொடர்புகள் உள்ளடங்கும். அத்துடன் இந்த ஆண்டு அக்டோபர் இறுதிக்கிணங்க சராசரியாக மாதத்திற்கு ரூ. 400 பில்லியன் பெறுமதியான பரிவர்த்தனைகளைச் செயல்படுத்துகிறது.

எல்லாவிதமான இணையவழி மற்றும் நடமாடும் வங்கி அலைவரிசைகளை தனியான ஓம்னி அலைவரிசை மேடையில் ஒருங்கிணைத்துள்ள கொம்பேங்க் டிஜிட்டல், மிகவும் பொறுப்புவாய்ந்த இணைய பிரயோகங்கள், மூன்று நடமாடும் பிரயோகங்கள் (Ios, Android மற்றும் Huawei) மூலமாக டெஸ்க்டொப் கணினிகள், லெப்டொப் கணினிகள், டெப்லட்கள் மற்றும் ஸ்மார்ட் போன்கள் என எல்லா கருவிகள் ஊடாகவும் முதலீடு, பணம் செலுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் டிஜிட்டல் தளத்தின் முன்னேற்றம் குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கியியலின் உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ச, ‘இங்கு மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை ComBank Digital மாற்றியமைத்துள்ள விதத்தை முழுமையாக புரிந்து கொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இப்போது தங்கள் நிதி மற்றும் வங்கித் தேவைகளை வங்கி கிளை ஒன்றிற்கு செல்லாமல் மக்களால் மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. புள்ளிவிவரங்கள் இதனை நிரூபிக்கின்றன.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும், மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. மற்றும் இலங்கையின் முதல் 100% கார்பன் நடுநிலைமை வங்கியாகும். கொமர்ஷல் வங்கியானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பைச் செயல்படுத்துகிறது, மேலும் இலங்கை வங்கிகளுக்கிடையில் பரந்த சர்வதேச வலையமைப்பைக் கொண்டுள்ளது, பங்களாதேஷில் 20 வங்கிக்கிளைகள், மியன்மாரில் ஒரு நுண்நிதி நிறுவனம் மற்றும் மாலைத்தீவில் பெரும்பான்மையுடன் கூடிய முழு அளவிலான முதற்தர வங்கி ஆகியவையாகும்.

# இலங்கையில் LONGi தயாரிப்புகளின் விநியோகத்தர் E.B. Creasy Solar




E.B. Creasy & Co., PLC இன் புதுப்பிக்கத்தக்க வலு பிரிவான E.B. Creasy Solar,இலங்கையில் LONGi தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. சோலர் தொழினுட்பத்தில் உலகளாவிய ரீதியில் முன்னோடியாக திகழும் LONGi உடனான இந்தப் பங்காண்மையினூடாக, இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுத் தீர்வுகளை மேம்படுத்துவதில் முக்கிய மைல்கல் எய்தப்பட்டுள்ளதுடன், நிலைபேறான எதிர்காலத்துக்கான வழிகோலப்பட்டுள்ளது. LONGi உடன் உத்தியோக விற்பனை பங்காளராக இணைந்துள்ள E.B. Creasy Solar, கொழும்பு மரீனோ பீச் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற அறிமுக நிகழ்வில் சோலர் பனெல்களை அறிமுகம் செய்திருந்தது.



இலங்கையின் வாடிக்கையாளர்களுக்கு தற்போது உயர் வினைத்திறன், தங்கியிருக்கும் திறன் மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுக்காக அறியப்படும் LONGi இன் புகழ்பெற்ற சோலர் பனெல்களை கொள்வனவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட கால பங்காண்மைகளினூடாக, ஒப்பற்ற தரத்தில் நவீன தொழினுட்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் E.B. Creasy Solar இன் அர்ப்பணிப்பு இந்தப் பங்காண்மையினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சமூகங்களுக்கு வலுவூட்டி, நிலைபேறாண்மையை ஊக்குவித்து மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுவுக்கு இலங்கையை மாற்றும் பணிகளுக்கு ஆதரவளிப்பதில் E.B. Creasy Solar முன்னிலையில் திகழ்கின்றது.

E.B. Creasy & Co. PLC இன் துணை நிறுவனமாக E.B. Creasy Solar, 20 வருடங்களுக்கு மேலாக, தொடர்ச்சியாக சூரியனின் வலுவை குடும்பங்கள், வியாபாரங்கள் மற்றும் சமூகங்களுக்கு கொண்டு வருவதில் பங்களிப்பு வழங்கியுள்ளது. 1878 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, E.B. Creasy & Co தமது சகல செயற்பாடுகளிலும் ஒழுக்கம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதியாகப் பேணுகின்றது. புதுப்பிக்கத்தக்க வலுவில் சிறந்த செயன்முறைகளை பின்பற்றி, 25 வருட கால உத்தரவாதத்தை வழங்குவதுடன், E.B. Creasy Solar நாட்டின் பசுமையான எதிர்காலத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது. UNDP மற்றும் வேர்ள்ட் விஷன் லங்கா ஆகிய சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளுடன் கைகோர்த்து, சமூகங்களில் விடிவை ஏற்படுத்தும் வியாபாரத்தில் E.B. Creasy Solar ஈடுபட்டுள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மேம்படும் நிலையில், காபன் நடுநிலை, வினைத்திறன் மற்றும் சூழல்-அக்கறை என்பவற்றினூடாக E.B Creasy இனால் சூரியனைப் போன்று நிலையான செயற்பாடுகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுகின்றது.




# கார்த்திகை தீபத் திருநாள்

கார்த்திகை தீபத் திருநாள், நாடளாவிய ரீதியில், சனிக்கிழமை (14) விளக்குகள் ஏற்றி அனுஷ்டிக்கப்பட்டது.
படங்கள்: பாறுக் ஷிஹான்








காடுகள் பூமியின் காற்றை பரிசுத்தமாக வைத்திருக்கும் இயல்பான திறன் இழக்கின்றன. இந்த அழிவின் விளைவாக பரிணாம மாற்றங்கள் காலநிலைக்கான மோசமான பாதிப்புகள் ஏற்படுகின்றன

காலநிலையை அவ்விடத்தில் பல ஆண்டுகள் (சுமார் 30 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல்) காணப்படும் வானிலைப் பதிவுகளை வைத்து மதிப்பீடு செய்கிறார்கள்

தண்ணீர் பற்றாக்குறை பகுதிகளில் உள்ள மக்கள் இடப்பெயர்ச்சி செய்யும் வழக்கமானதாகும், மேலும் இதனால் சமூக அமைப்புகளில் மாற்றங்கள் தீவிரமான சமூக பொருளாதார பிரச்சனைகள் ஏற்படுகின்றன

# சூழல் மாசுபாடும் காலநிலையும்



மொஹமட் மக்பூல் சப்வான்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
இரண்டாம் வருட மாணவன்,
மன்னார்,கூழாங்குளம்.

இயற்கை சமநிலை ஏதாவது ஒரு காரணத்தால் குழப்பப்படும் போது அது சூழல் தொகுதியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே சூழல் தொகுதியில் மனிதன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தும் விரும்பத்தகாத செயற்பாடுகள் மற்றும் பாதகமான பெரும்பாலும் மீள முடியாத விளைவுகள் சூழல் மாசடைதல் எனப்படுகிறது.

இறைவனால் படைக்கப்பட்ட அரிய நுட்பமான வியப்பூட்டும் வினைத்திறன்கள் சூழலும் ஒன்றாகும். மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை சூழலை பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது.

நல்ல சூழல் ஒரு மனிதனை சமூகத்தில் ஆரோக்கியமான மனிதனாகவும், தீய மாசடைந்த சூழல் மனிதனை நோயாளியாகவும் மன அழுத்தம் நிறைந்தனவாகவும் மாற்றுகிறது.

மனிதன் தான் வாழும் சூழலை பாதுகாத்து வாழுகின்றபோது அந்த சூழலும் அழகாக மாறுவதுடன் அவர்களின் வாழ்க்கையும் அழகானதாகவும் ஆரோக்கியமானதாகவும் மாறுகிறது

"தற்போது உலகை அச்சுறுத்தும் பாரிய அளவிலான அச்சுறுத்தல்களில் சுற்றுச்சூழல் மாசடைதலும் முக்கிய இடம் வகிக்கிறது" என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது.

## வானிலையும் காலநிலையும்

வானிலை என்பது பூமியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பரிமாணங்களின் (உதாரணமாக வெப்பம் காற்றின் வேகம் மழை ஈரப்பதம் வானிலை மேகங்கள்) நிலை அல்லது நிலைத்தன்மை. இது குறித்த இடத்திலிருந்து பெரும்பாலும் குறுகிய கால எல்லைக்குள் நிகழும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த நிலை நிலைத்துவைக்கும் பரிமாணங்களை "வானிலை மாறுதல்கள்" என்று அழைக்கின்றனர், அவை பருவ பரிமாணங்களை தீர்மானிக்கும்.

காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நீண்டகால வானிலை உருவமைப்பு அல்லது வடிவத்தை குறிக்கின்றது. இது சராசரி வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்றின் திசை, புயல்கள் போன்ற வானிலை நிலைகள் மற்றும் விதிகளை உள்ளடக்குகிறது. குறிப்பாக காலநிலையை அவ்விடத்தில் பல ஆண்டுகள் (சுமார் 30 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல்) காணப்படும் வானிலைப் பதிவுகளை வைத்து மதிப்பீடு செய்கிறார்கள்.

காலநிலையில்செல்வாக்குசெலுத்தும்பௌதிககாரணிகள்மற்றும் மாநிடகாரணிகள்

## பௌதிக காரணிகள்

ஒரு இடத்தின் நீண்டகால வானிலை அமைப்பை புவியியல், இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளின் மூலம் பாதிக்கும் முக்கிய அம்சங்களை குறிக்கிறது. இவற்றை இரண்டு பிரிவாக விவரிக்கலாம்

### அகலாங்கு (Latitude):

அகலாங்கு என்பது ஒரு இடம் பூமத்திய ரேகை (*Equator*) மற்றும் துருவங்களுக்கு இடையில் எந்த இடத்தில் உள்ளது என்பதை குறிக்கிறது. இது ஓர் இடத்தின் வெப்பநிலையை தீர்மானிக்கிறதுடன், சூரியக்கதிர்களின் நேர்முக தாக்கத்தையும் நிர்ணயிக்கிறது.

### பூமத்திய ரேகை அருகில் உள்ள பகுதிகள்:

சூரியக்கதிர்கள் நேராக விழுவதால் இந்த இடங்கள் அதிக வெப்பமான காலநிலையைக் கொண்டிருக்கும். (உதாரணம்: சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகள்)

### துருவ பகுதிகள்:

சூரியக்கதிர்கள் ஒரு சாய்வான கோணத்தில் மோதுவதால், குறைந்த வெப்பநிலையுடன் குளிர்ச்சியான காலநிலையைக் கொண்டிருக்கும். (உதாரணம்: ஆர்க்டிக், அன்டார்க்டிக்)

### உயரம் (Altitude):

ஒரு இடத்தின் உயரம் கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் உள்ளது என்பது வெப்பநிலையை நேரடியாக பாதிக்கிறது.

### நடுநிலை (Sea Level):

கடல் மட்டத்திற்கு அருகிலுள்ள இடங்கள் அதிக வெப்பமுடனும் ஈரப்பதத்துடனும் காணப்படும்.

### உயர்ந்த பகுதிகள்:

உயர்ந்த இடங்களில் (உதாரணம்: மலையால மண்டலங்கள்) வெப்பநிலை குறையும். ஒவ்வொரு 165 மீட்டர் உயரத்திற்கு வெப்பநிலை சுமார் 1°C குறையும். (உதாரணம்: நீலகிரி மலைகள், )

### கடல் மற்றும் நீர்நிலைகள் (Proximity to Water Bodies):

ஒரு இடத்தின் கடலுக்கு அல்லது பெரிய நீர்நிலைக்கு அருகிலோ, தூரத்திலோ இருப்பது அதன் வெப்பநிலையை மற்றும் ஈரப்பதத்தை தீர்மானிக்கும்.

### கடலுக்கு அருகிலுள்ள பகுதிகள்:

கடல் நீர் வெப்பத்தை சேமிக்கவும், வெளியேற்றவும் வல்லமை கொண்டதால், கடலுக்கு அருகிலுள்ள பகுதிகளில் வெப்பநிலை மிதமானதாக இருக்கும். (உதாரணம்: சென்னை)

### உட்பகுதிகள் (Inland Areas):

கடலின் தாக்கம் இல்லாததால் வெப்பநிலையிலும் ஈரப்பதத்திலும் அதிக மாறுபாடு காணப்படும். (உதாரணம்: டெல்லி)

### மலைகளின் பாதிப்பு (Mountain Influence):

மலைகளின் அமைப்பும் இடத்தின் மழைப்பொழிவு அளவையும் காலநிலையையும் தீர்மானிக்கின்றன.

### மழை நிழல் விளைவு பகுதி (Rain Shadow Effect):

மலைகளின் ஒரு பக்கம் அதிக மழையை பெறலாம், மற்ற பக்கம் மிகவும் வறண்டதாக இருக்கும். (உதாரணம்: மேற்கு கடற்கரை மலைகள்)

### துளிர் மலைகள் (Tropical Mountains):

இந்த மலைகள் பசுமையாகவும், ஈரப்பதம் நிறைந்ததாகவும் இருக்கும்.

### காற்றின் திசை மற்றும் வேகம் (Wind Patterns and Speed):

காற்றின் திசை ஒரு இடத்தின் ஈரப்பதத்தையும் வெப்பநிலையையும் தீர்மானிக்கிறது.

### கடல் காற்று:

கடல் வழியாக வீசும் காற்று ஈரப்பதமாக இருக்கும், இது மழைக்கு வழிவகுக்கும்.

### நிலக்காற்று:

தொலை தூரங்களில் இருந்து வீசும் காற்று உலர்ந்ததாக இருக்கும்

### கடல் பிரவாகங்கள் (Ocean Currents):

கடல் பிரவாகங்கள் வெப்பநிலையை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கின்றன.

### சூடான பிரவாகங்கள்:

குளிரான பகுதிகளுக்கு வெப்பத்தை கொண்டு செல்லும். (உதாரணம்: *Gulf Stream*)

### குளிர்ந்த பிரவாகங்கள்:

வெப்பமான பகுதிகளை குளிர்விக்க உதவும். (உதாரணம்: *Labrador Current*)

### சூரிய கதிர்கள் (Solar Radiation):

சூரிய கதிர்கள் எந்த அளவில் ஒரு இடத்தை அடைகின்றன என்பதைப் பொறுத்து வெப்பநிலை மாறுபடும்.

### நேர்முக சூரிய கதிர்கள்:

அகலாங்கு மற்றும் பருவங்களின் அடிப்படையில் வெப்பநிலை வேறுபடும்.

### அழ மண்டல திணி மாற்றங்கள் (Atmospheric Pressure Changes):

அழுத்த மண்டலங்கள் காலநிலையை அதிகமாக பாதிக்கின்றன.

### குறைந்த அழுத்த மண்டலம்:

மழை, புயல் போன்ற நிகழ்வுகளுக்கு வழிவகுக்கும்.

### உயர் அழுத்த மண்டலம்:

வறண்ட மற்றும் தென்பகுதிகளின் சீரான கால நிலையை உருவாக்கும்.

### முழுமையான பூமி இயல்புகள் (Geological Features):

நிலச்சரிவு, நில மண்டல அமைப்பு போன்றவை காலநிலையின் சிறு மாற்றங்களை உருவாக்கும்.

## மானிடக்காரணிகள்

காலநிலையில் செல்வாக்கு செலுத்தும் மானிட காரணிகள்

காலநிலை மாற்றம் என்பது மாபெரும் பரிணாமங்களின் தொகுப்பாகும், இது புவியில் உள்ள பருவ நிலை மற்றும் பருவ சந்திரன் மாற்றங்களை பிரதிபலிக்கிறது. காலநிலை மாற்றத்தை முதன்மையாக மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கை காரணிகள் எனப் பிரிக்கலாம். காலநிலை மாற்றம், அதன் கடுமை, அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் நமக்கு அதிலிருந்து வரும் பாதிப்புகள் அனைத்தும் ஒரு மிகப்பெரிய கவனத்தை பெற்றுள்ளது.

காலநிலையின் மீது மனிதர்களின் செல்வாக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பொதுவாக, மானிடக் காரணிகள் என்பது மனிதனின் செயல்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை குறிக்கும். இந்த வகையில், மனிதர்கள் காலநிலைக்கு எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை ஆய்வு செய்த போது பல காரணிகள் முன் வரும்.

இந்தக் கட்டுரையில், காலநிலையில் செல்வாக்கு செலுத்தும் மானிட காரணிகளை விரிவாக ஆய்வு செய்வோம்.

### காற்று மாசு

புவியில் காற்று மாசு மிகவும் முக்கியமான மனிதனால் உருவாகும் காலநிலை மாற்ற காரணியாகும். காற்று மாசு என்பது முதன்மையாக மூன்று வகையான வாயுக்கள் குறிப்பாக காம்பவின்கள் உலோகத் துகள்கள் மற்றும் மித வாயு வாயுக்கள் ஆகியவை ஆகும். இந்த வாயுக்கள் அனைத்தும் உற்பத்தி போக்குவரத்து தொழில்துறை விவசாயம் மற்றும் ஆழ்ந்த தீவிரமான வணிக செயல்பாடுகளால் புவி வெப்ப நிலை உயர்வை தூண்டுகின்றன.

காற்று மாசு ஏற்படுத்தும் மற்றும் மற்ற வாயுக்கள் பூமியின் வளிமண்டலத்தில் சூடிய சாளரங்களை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக இரசாயன பதவிகள் எவ்வாறு பரவுகின்றன என்பதைக் கவனித்தால் காற்றின் மாசின்மை பூமி வெப்ப நிலையை உயர்த்தி அதன் முழு சூட்டும் உயரும். இந்தக் குறிப்பில் கரிம மற்றும் பரமாணு எண்களுக்குரிய வாயுக்கள் இந்த அனுபவத்தை ஏற்படுத்துகின்றன.

### காடுகள் அழிவு

மிகவும் முக்கியமான மானிட காரணிகளில் ஒன்று காடுகள் அழிவாகும். காடுகள் மிகப்பெரிய அளவில் கொண்டுள்ளன. மனிதர்கள் விரிவாக்கம் விவசாயம் போக்குவரத்து மற்றும் கட்டுமான உற்பத்தி ஆகியவற்றுக்காக காடுகளை அகற்றுகிறார்கள். இதனால் காடுகள் பூமியின் காற்றை பரிசுத்தமாக வைத்திருக்கும் இயல்பான திறன் இழக்கின்றன. இந்த அழிவின் விளைவாக பரிணாம மாற்றங்கள் காலநிலைக்கான மோசமான பாதிப்புகள் ஏற்படுகின்றன.

### விவசாய நடவடிக்கைகள்

விவசாயம் என்பது காலநிலைக்கு மிக முக்கியமான மனிதச் செயலில் ஒன்றாகும். இதில், மானிடக் காரணிகளான இருண்டு உமிழ்வு நீர் வேதியியல் மீட்டல் மற்றும் விவசாய உறுப்பு உணவுகளின் வளர்ச்சியான கட்டமைப்புகளின் காரணமாக காலநிலை மாற்றங்கள் உருவாகின்றன.

அரிசி கிழங்குகள், மாடுகள் மற்றும் மாடு போன்றவற்றின் மூச்சுகளின் மூலம் மீதமுள்ள வாயுக்கள் மிகுந்த அளவில் வெளியிடப்படுகின்றன. இது மேலதிக வெப்பத்தை நிலைத்திருக்கச் செய்கிறது.

### உருளைகளின் மற்றும் வளிமண்டல மாற்றங்கள்

மனிதர்கள் நகரப்புற வளர்ச்சி மற்றும் தொழிற்சாலை அமைப்புகளுக்கு பல்வேறு நிலத்தள மாற்றங்களை மேற்கொள்கிறார்கள். இந்த நகரங்களின் வளர்ச்சி மானிடச் செயல்களால் புதுவட்டங்கள்) உருவாகிறது. இதன் மூலம் நகரங்களின் உள் வெப்பமண்டலத்தை அதிகரிக்கின்றன.

அதனால்தான் மாசுப் பாகங்களின் எண்ணிக்கை அதிகரித்து அதனால் பருவ நிலை பாதிக்கின்றது

### திடப்படுதல்

திடப்படுதல் என்பது அதிக அளவில் மரம் அழித்தல் நிலம் பயனற்றதாக பரிதவிப்பு மற்றும் ஆற்றங்கரை மாற்றம் போன்ற செயல்களால் ஏற்படும் நில மாற்றமாகும். இது மண் பராமரிப்பு நீர் நிலை மற்றும் காலநிலை மாற்றத்திற்கு நேரடியாகப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

### நீர் மாசு

மிகவும் முக்கியமான மானிடத் தொழில்கள் ஒன்று நீர் மாசு ஏற்படுத்துகின்றன. இந்த மாசு உற்பத்தி மற்றும் உபயோகப்படுத்தல் முறைகளின் மூலம் நீரின் தரத்தை பாதிக்கின்றது. நீர் மாசுபடுத்தப்பட்ட நதிகள் மற்றும் ஏரி குடிநீருக்கான சிக்கல்கள் அனைத்தும், கடல் நிலத்தின் வளர்ச்சியையும் வெப்ப நிலையைப் பெருக்கி விடுகின்றன.

### உலக அளவில் தொழில்நுட்ப வளர்ச்சி

தொழில்நுட்பம் மற்றும் அதன் வளர்ச்சி மனிதர்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துள்ளது. அதன்போது வரும் கோரி கட்டைகள் பசுமை ஊர்வலம் மின்சார உற்பத்தி மற்றும் ஆவணம் போன்றவற்றின் பல வகை பரவல் வெப்பநிலை மாற்றத்தையும் காரணமாகிறது

## காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய

பௌதீக, சமூக மற்றும் பொருளாதார பாதிப்புகள்

காலநிலை மாற்றம், புவியில் பருவ நிலைகளில் நீண்ட காலம் நிகழும் மாற்றங்களைக் குறிக்கின்றது. இது முக்கியமாக மனிதர்களின் செயல்கள், இயற்கை காரணிகள் மற்றும் இவற்றின் இணைப்புகளால் ஏற்படுகிறது. காலநிலை மாற்றம் உலகம் முழுவதும் பல்வேறு தளங்களில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது, மற்றும் அது பௌதீக, சமூக மற்றும் பொருளாதார இடங்களில் மிகப்பெரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இந்த மாற்றங்கள் இயற்கை வளங்கள், மக்கள் வாழ்விடம், உணவு உற்பத்தி மற்றும் சமூக அமைப்புகளை பாதிக்கும் விதமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் விளைவுகளை உருவாக்குகின்றன.

### பௌதீக பாதிப்புகள் (Physical Impacts) கடல் மட்டம் உயர்வு

புவியின் வெப்பநிலை கோள் அதிகரித்தல் காரணமாக, பருவ நிலைகளில் முக்கியமான மாற்றங்கள் வருகின்றன. உலகளாவிய வெப்பநிலை உயர்வு, கடல் உறையும் பனி கற்களும் பெருவெளிப்படும் வெப்ப வாதங்கள் கடல் மட்டத்தை உயர்த்துகின்றன. இதனால் கடற்கரை பகுதிகள், ஆழ்சூழல் (*coastal regions*), ஆற்றங்கரைகள் போன்ற இடங்கள் பாதிக்கப்பட்டு, ஊர்ப்புற நகரங்கள் மற்றும் விவசாய நிலங்கள் நாசமாகும்.

### அதிக மழை மற்றும் வெள்ளம்

காலநிலை மாற்றம் வெப்பநிலையை உயர்த்துவதால், மழை மற்றும் புயல்களின் அளவையும் அதிகரிக்கின்றது. இந்த மாற்றம் குறிப்பாக பெரும்பான்மையான மழைக் கடலில் (*tropical regions*) அதிகமான வெள்ளங்களை ஏற்படுத்துகின்றது. கடலில், நதி அல்லது ஓடுகளில் அதிக அளவு நீர் சேர்வதால் பெரும் வெள்ளங்கள் ஏற்படும்.

### வருமானவற்றான நிலங்கள்

உலகின் பல பகுதிகளில் மழைக்கான நேரம் குறைந்து, வறட்சிகள் அதிகரிக்கின்றன. இது நிலத்தின் உற்பத்தி திறனை பாதிக்கிறது, குறிப்பாக விவசாயத்திற்கு. இந்த வறட்சியால், விவசாய நிலங்கள் உபயோகத்திற்கு அல்லாத நிலையில் மாறுகின்றன, மேலும் இது மனித வாழ்விடம் மற்றும் புவியின் சமநிலையை பாதிக்கும்.

### வெப்பகால அலைச்சல்

வெப்பநிலை அதிகரித்திருப்பதால், வெப்பக் காற்றின் அலையின் தாக்கம் அதிகரிக்கிறது. இது, குறிப்பாக நகரங்களின் அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளில், பொதுவாக தீவிரமான வெப்ப அலைச்சல்களை ஏற்படுத்துகிறது. இந்த வெப்ப அலைச்சல்கள், மனித உடல் மற்றும் பருவத்தின் உயிரணுக்களை பாதிக்கும் எனவே அவை மரணம் மற்றும் உடல் நலத் திடீரென பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

### சமூக பாதிப்புகள்– இடப்பெயர்ச்சி

காலநிலை மாற்றம் காரணமாக, அதிகமாக கடல் மட்டம் உயர்ந்திருப்பதால் அல்லது வெள்ளம், வறட்சிகள் போன்றவற்றின் காரணமாக, மக்கள் இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை உருவாகின்றது. கடற்கரை அல்லது வெப்பமான, தண்ணீர் பற்றாக்குறை பகுதிகளில் உள்ள மக்கள் இடப்பெயர்ச்சி செய்யும் வழக்கமானதாகும், மேலும் இதனால் சமூக அமைப்புகளில் மாற்றங்கள் மற்றும் தீவிரமான சமூக பொருளாதார பிரச்சனைகள் ஏற்படுகின்றன.






# சதுரங்கத்தில் புதிய சகாப்தம்

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் நிறைவு விழாவில், உலக சாம்பியன் பட்டம் வென்ற தமிழக இளம் வீரர் குகேஷுக்கு தங்கப் பதக்கம், டிராபியுடன் ரூ.11 கோடி பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் சீனாவின் லிங் லிரெனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் தமிழகத்தை சேர்ந்த இந்திய கிராண்ட் மாஸ்டரான 18 வயது குகேஷ். இதன்மூலம் இளம் வயதில் உலக சாம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையையும் படைத்தார்.

விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு உலக சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி நிறைவு விழா சிங்கப்பூரில் வெள்ளிக்கிழமை (13) மாலை நடந்தது. இதில், இளம் உலக சாம்பியனான குகேஷுக்கு, தங்கப் பதக்கத்தையும், டிராபியையும் சர்வதேச செஸ் சங்கத்தின் (ஃபிடே) தலைவர் ஆர்கடி டிவோர் கோவிச் வழங்கினார். ரூ.11 கோடி பரிசுத் தொகைக்கான காசோலையும் அவருக்கு வழங்கப்பட்டது.

விழாவில் குகேஷ் பேசும்போது, “நான் ஒரு மில்லியன் முறை வாழ்ந்ததுபோல இத்தருணத்தை உணர்கிறேன். இந்த கோப்பையை ஏந்தியிருப்பதை, என் வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும்விட முக்கியமானதாக கருதுகிறேன். பல கனவுகளோடு, பல சவால்களும் இந்த பயணத்தில் இருந்தன. என்னுடன் இருந்தவர்களால் அது அழகாகவே அமைந்தது. நான் தீர்வுகாண முடியாமல் தவித்து நின்ற நேரத்தில், கடவுள் தான் என்னை அழைத்துச் சென்று வழிகாட்டியுள்ளார்” என்று தெரிவித்தார்.

சாம்பியன் டிராபியை பெற்ற பிறகு, மேடையில் இருந்து இறங்கி வந்த குகேஷ், அதை தனது தந்தை ரஜினிகாந்திடம் வழங்கினார். அவர், அதை குகேஷின் அம்மா பத்மகுமாரியிடம் கொடுத்தார். அதை கைகளில் வாங்கிய அவர், நெகிழ்ச்சியுடன் முத்தமிட்டார். விழாவில் நூற்றுக் கணக்கான ரசிகர்கள் குகேஷை சூழ்ந்தனர். மகிழ்ச்சியுடன் அவர்கள் அனைவருக்கும் ஆட்டோகிராப் போட்டுத் தந்தார்.

முன்னதாக ஃபிடே சார்பில் காலையில் நடத்தப்பட்ட போட்டோ ஷூட்டின் போது, டிராபியை வியந்து பார்த்த குகேஷ், “நிறைவு விழாவிலேயே டிராபியை பெற்றுக் கொள்கிறேன். இப்போது தொட்டுப் பார்க்க விரும்பவில்லை” என்று கூறிவிட்டார்.

மிக இளம் வயதிலேயே உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி சாதனை படைத்து, இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்த்த குகேஷை, முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பாராட்டி வாழ்த்தி பதிவிட்டிருந்தார். அத்துடன் தொலைபேசி வாயிலாகவும் அவரை தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழகத்துக்கு பெருமை சேர்த்துள்ள குகேஷுக்கு ரூ.5 கோடி ரொக்கப் பரிசு வழங்குமாறு முதல்வருக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார். அதையேற்று, குகேஷை மேலும் ஊக்குவிக்கும் வகையில், ரூ.5 கோடி ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார் என தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்றுள்ள குகேஷ், சென்னை அடுத்த மேல் அயனம்பாக்கத்தில் உள்ள வேலம்மாள் வித்யாலயா பள்ளி மாணவர் ஆவார். அவரது வெற்றி குறித்து பள்ளி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தியில், ‘தனது செஸ் பயணத்தை சிறுவயதிலேயே தொடங்கியவர் குகேஷ். அவரது திறமையை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்ட பள்ளி, அவரது திறமைகளை வளர்த்துக் கொள்ள முழு ஆதரவு வழங்கியது. கடும் பயிற்சி மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வத்தால் 12 வயதிலேயே கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெற்றார், தற்போது இந்திய சதுரங்கத்தில் ஒரு புதிய சகாப்தம் படைத்துள்ளார். இளம் திறமையாளர்களை வளர்க்கும் வேலம்மாள் போன்ற நிறுவனங்களின் அர்ப்பணிப்பு, ஆதரவுக்கு இது ஒரு சான்று’ என்று கூறப்பட்டுள்ளது.



## “குகேஷை வேண்டுமென்றே வெற்றி பெற வைத்தார்”

உலக செஸ் சாம்பியன்ஷிப்பின் கடைசி சுற்று ஆட்டத்தின் போது சீனாவின் டிங் லிரென் செய்த தவறு அவரது தரத்திலான வீரருக்கு மிகவும் வேடிக்கையானது என ரஷ்ய செஸ் கூட்டமைப்பின் தலைவர் ஆண்ட்ரே ஃபிலடோவ் குற்றச்சாட்டு வைத்துள்ளார்.

18-வது உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை 18 வயது இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ் வென்றுள்ளார். சீனாவை சேர்ந்த டிங் லிரெனுடனான இந்தப் போட்டியில் கடைசி சுற்றில் வெற்றி பெற்றதன் மூலம் சாம்பியன் பட்டத்தை குகேஷ் வென்றார். இந்நிலையில், டிங் லிரென் மீது ஆண்ட்ரே ஃபிலடோவ் குற்றம் சுமத்தியுள்ளார்.




“கடைசி சுற்று ஆட்டத்தில் டிங் லிரென் 55-வது நகர்வில் தவறு செய்தார். அது டி.குகேஷுக்கு சாதகமாக அமைந்தது. இது குறித்து சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE) முறையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். 14-வது சுற்றின் முடிவு தொழில்முறை செஸ் விளையாட்டு வீரர்கள் மற்றும் வல்லுநர்கள் மத்தியில் கேள்வியை எழுப்பி உள்ளது. சீன வீரரின் நகர்வு சந்தேகத்தை தருகிறது. அது அவரது தரத்திலான வீரருக்கு மிகவும் வேடிக்கையானது. அதை அவர் வேண்டுமென்றே செய்தது போல உள்ளது” என ஆண்ட்ரே ஃபிலடோவ் தெரிவித்துள்ளார்.

14 சுற்றுகள் கொண்ட உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் 3, 11 மற்றும் 14-வது சுற்றுகளை குகேஷ் வென்றிருந்தார். முதல் மற்றும் 12-வது சுற்றை டிங் லிரென் வென்றார். மற்ற அனைத்து சுற்றுகளும் டிராவில் முடிந்தது.

இதற்கு முன்பு உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை இளம் வயதில் வென்றவர் என்ற சாதனை ரஷ்யாவின் கேரி காஸ்பரோவ் வசம் இருந்தது. கடந்த 1985-ல் தனது 22-வது வயதில் உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார் கேரி காஸ்பரோவ். அதை இப்போது தனது 18-வது வயதில் முறியடித்துள்ளார் குகேஷ் என்பது குறிப்பிடத்தக்கது.

## “விடாமுயற்சிக்கு கிடைத்த வெகுமதி”

கடைசி சுற்றில் சீனாவின் டிங் லிரெனை வீழ்த்தி குகேஷின் சாம்பியன் ஆனார். அவரது வெற்றி குறித்து ஐந்து முறை உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த் தன் கருத்தை தெரிவித்துள்ளார்.

“அந்த பையன் சாம்பியன் பட்டத்தை வென்றதை நான் கண்டேன். அவரை நான் அப்படி அழைக்கவே விரும்புகிறேன். ஏனெனில், நான் முதல் முறை உலக சாம்பியன் பட்டம் வென்றபோது அவர் பிறக்கவே இல்லை. 18 வயதான அவர், தற்போது 18-வது உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் பட்டம் வென்றுள்ளார். அவரது அமைதி மற்றும் தன்னம்பிக்கை இந்த விளையாட்டின் வருங்காலமாக இருக்கும்.



14-வது சுற்றில் அவர் வெற்றி பெற்றது எனக்கு ஆச்சரியம் அளித்தது. எல்லோருமே இறுதி சுற்று டிராவில் முடியும் என எதிர்பார்த்திருந்தனர். இறுதிவரை தனது முயற்சியை தொடர்ந்த குகேஷின் விடாமுயற்சிக்கு கிடைத்த வெகுமதி இது. அதே நேரத்தில் குகேஷ் தனது திட்டத்தில் உறுதியாக இருந்தார். அது அவரது ஆட்டத்தில் வெளிப்பட்டது. பின்னடைவை எதிர்கொண்டாலும் அதை எதிர்த்து நின்றார். அவரது அணுகுமுறை எனக்கு பிடித்துள்ளது.

டிங் லிரென் ஆட்டத்தை ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது 14 சுற்றிலும் சிறப்பாக விளையாடி இருந்தார். 12-வது சுற்றில் அவரது வெற்றி என்னை ஈர்த்தது. கடைசி சுற்று ஆட்டத்தில் திடீரென டிங் லிரென் தவறு செய்தார். இறுதியில் சாம்பியன் பட்டத்தை வெல்வதற்கான அந்த எட்ஜ் குகேஷ் வசம் இருந்தது.

வெற்றிக்கு பிறகு உணர்ச்சி பெருக்கில் குகேஷ் ஆனந்த கண்ணீர் சிந்தியது நெகிழ்ச்சியான தருணம். நாம் ஒவ்வொருவரும் இது மாதிரியான தருணங்களில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவோம். நானும் எனது காலத்தில் இதே மாதிரியான உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளேன். அவர் அதை வெளிப்படையாக செய்ததை பார்த்து மகிழ்ந்தேன்.

செஸ் வரலாற்றில் இளம் சாம்பியன் என்ற மகத்தான சாதனையை குகேஷ் படைத்துள்ளார். தற்போது தனது ஆட்டத்தை அவர் அனுபவித்து விளையாட வேண்டும்.” எனக் கூறியுள்ளார்.

அமெரிக்கா

பில் கேட்ஸ்

# சொத்துக்களை இழக்க போகிறார்?

உலக பணக்காரர்களான மைகோரோசாப்ட் நிறுவர் பில் கேட்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவர் எலான் மஸ்க் நீண்ட நாள் பகையாளிகள். பில் கேட்ஸை தனது கருத்துக்களால் அவ்வப்பொது எலான் மஸ்க் சீண்டுவது வழக்கம்.

டிரம்ப் ஆதரவால் தற்போது அமெரிக்க அரசியலில் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ள எலான் மஸ்க்கின் சொத்துமதிப்பு உயர்ந்து வருகிறது. எனவே, தனக்கு சொந்தமான எக்ஸ் தளத்தில் மீண்டும் பில் கேட்ஸை, எலான் மஸ்க் சீண்டியுள்ளார்.

“டெஸ்லா நிறுவனத்தின் வளர்ச்சிக்கு எதிராக பில்கேட்ஸ் முதலீடு செய்துள்ளார். ஆனால் டெஸ்லா உலகின் மதிப்புமிக்க நிறுவனமாக உருவெடுக்கும்பட்சத்தில் அது பில்கேட்ஸை கூட திவாலாக்கி விடும்” என்று, எலான்



மஸ்க் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

டெஸ்லாவுக்கு எதிராக பில்கேட்ஸ் ஷார்ட் பொசிஷனை அதிக அளவில் வைத்துள்ளார். பங்குச்சந்தையில் ஒரு நிறுவனத்தின் பங்குகள் சரிய போகிறது என்று கூறி அந்த விஷயத்தில் முதலீடு செய்வதே ஷார்ட் பொசிஷன் ஆகும்.

டெஸ்லா நிறுவனத்தால் 1.5 பில்லியன் டொலரை இழந்ததாக கூறி கடந்த 2022ஆம் ஆண்டு பில் கேட்ஸ், டெஸ்லா பங்குகளை ஷார்ட் செய்தார்.

இதன்படி, டெஸ்லா நட்டமடையும் பட்சத்தில், அது பில் கேட்ஸ்கு அதிக இலாபத்தை வழங்கும். இதற்கு, எலான் மஸ்க் கடுமையான எதிர்வினையாற்றினார். அதிலுருந்து இருவருக்குமிடையில் பகை வளர்ந்தது.

இந்த நிலையில்தான், தற்போது தனக்குள்ள செல்வாக்கை பறைசாற்றும் விதமாக, டெஸ்லா நட்டமடையாமல் ஒரு வேலை அதற்கு நேர்மாறாக உலகின் மதிப்புமிக்க நிறுவனமாக உயர்ந்தால் அதனால் பில் கேட்ஸ் கூட சொத்துக்களை இழந்து விடுவார் என்று மஸ்க் தம்பட்டம் அடித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி மைக்ரோசாப்டின் சந்தை மூலதனம் அல்லது சந்தை மதிப்பு $3.316 டிரில்லியன் ஆகும். அதேவேளை டெஸ்லாவில் சந்தை மதிப்பு $1.251 டிரில்லியன் ஆகும்.



கிரீஸ்

அகதி படகு கவிழ்ந்ததில்

## ஐவர் பலி; பலர் மாயம்

கிரீஸ் நாட்டின் கடற்பகுதியில், அகதிகள் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 5 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

கிரீஸ் நாட்டில் உள்ளதற்குத் தீவான கவ்டோஸ் பகுதியில், வெள்ளிக்கிழமை (13) இரவு அகதிகளை ஏற்றி கொண்டுவந்த மரப் படகே, இவ்வாறு கவிழ்ந்துஉள்ளது.

இதில் பயணித்த பலர் காணாமல் போயுள்ளதாகவும், கிரீஸ் கடலோர காவல்படை, சனிக்கிழமை (14) தெரிவித்துள்ளது.


சரக்கு கப்பல்கள் உதவியுடன் காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மீட்கப்பட்டவர்களில் 29 பெண்கள் அடங்குவர். அகதிகளில் பெரும்பாலானோர் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

காணாமல் போனவர்களின் சரியான எண்ணிக்கை தெரியாததால் மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தாய்லாந்து

திருவிழாவில் குண்டுவீச்சு:

## மூவர் பலி; 50 பேர் படுகாயம்



தாய்லாந்தில், திருவிழாவில் இடம்பெற்ற வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்தில், மூவர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்தின் தக் மாகாணம், உம்பாங் நகரில் வருடாந்த திருவிழா சனிக்கிழமை (14) இரவு நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

அப்போது, விழாவில் கலந்துகொண்ட இருதரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த சிலர் அந்த கூட்டத்தை நோக்கி வெடிகுண்டு வீசினர்.

இந்த குண்டுவெடிப்பில், 3 பேர் பலியாகினர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மீட்பு படையினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்தனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், பலி எண்ணிக்கை உயரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா, தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுடெல்லி

‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ பிரேரணை

## கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இன்று தாக்கல்

“ஒரே நாடு, ஒரே தேர்தல்” தொடர்பான பிரேரேரணைகள், கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில், பாராளுமன்றத்தில், இன்று (16) தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த 1952ஆம் ஆண்டு, மக்களவை மற்றும் மாநிலங்களின் சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டது. கடந்த 1957, 1962ஆம் ஆண்டுகளிலும் மக்களவை, சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடந்தது. கடந்த 1968ஆம் ஆண்டில் பல்வேறு மாநிலங்களின் சட்டசபைகள் கலைக்கப்பட்டன.

கடந்த 1970ஆம் ஆண்டில் மக்களவை கலைக்கப்பட்டது. இதன்பிறகு மக்களவை மற்றும் மாநிலங்களின் சட்டசபைகளுக்கு தனித்தனியாக தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டு சுதந்திர தின உரையின்போது ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி முன்மொழிந்தார். இந்த திட்டத்தை ஆய்வு செய்ய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் கடந்த ஆண்டு செப்டம்பரில் உயர்நிலை குழு அமைக்கப்பட்டது.

இந்த குழு பல்வேறு கட்ட ஆய்வுகளை நடத்தி, கடந்த மார்ச் மாதம், ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் 18




ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்தது. இதை அடிப்படையாக வைத்து ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ பிரேரணை வரையறுக்கப்பட்டது.

இந்த பிரேரணைக்கு மத்திய அமைச்சரவை கடந்த 12ஆம் திகதியன்று ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில் மத்திய சட்டத் துறை மந்திரி அர்ஜுன் ராம் மேக்வால் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ பிரேரணையை மக்களவையில்,இன்று (16), அறிமுகம் செய்கிறார்.

மக்களவை, சட்டசபை தொடர்பாக ஒரு பிரேரணையாகவும், யூனியன் பிரதேசங்கள் தொடர்பாக ஒரு பிரேரணையாகவும் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இந்த பிரேரணைகள் பாராளுமன்ற கூட்டுக் குழு பரிசீலனைக்கு அனுப்பப்படவுள்ளன.

இதனிடையே பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு’ஒரே நாடு, ஒரே தேர்தல்’ பிரேரணையை உறுதியாக நிறைவேற்றும் முடிவில் உள்ளது.

அதேநேரம் இந்த ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ திட்டத்தை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. எனவே, இந்த பிரேரணைகளை அறிமுக நிலையிலேயே அவை எதிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

# முன்னிலையில் அவுஸ்திரேலியா




இந்தியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டின் இரண்டாவது நாள் முடிவில் முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில், பிறிஸ்பேணில் சனிக்கிழமை (14) ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட அவுஸ்திரேலியா, ட்ரெவிஸ் ஹெட்டின் 151, ஸ்டீவன் ஸ்மித்தின் 101 ஓட்டங்களோடு நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 405 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில் அலெக்ஸ் காரி 45 ஓட்டங்களுடனும், மிற்செல் ஸ்டார்க் ஏழு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். பந்துவீச்சில் ஜஸ்பிரிட் பும்ரா 5 மற்றும் நிதிஷ் குமார் ரெட்டி, மொஹமட் சிராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் ஆர்சனல் எவெர்ற்றன் போட்டி

### லிவர்பூல் புல்ஹாம் போட்டியும் சமநிலை




இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (14) நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற புல்ஹாமுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது. லிவர்பூல் சார்பாக கோடி கக்போ, டியகோ ஜோட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். புல்ஹாம் சார்பாக, அன்ட்ரயாஸ் பெரைரா, றொட்றிகோ முனிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் நியூகாசில் யுனைட்டெட் வென்றது.

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

## ஆதிக்கம் செலுத்தும் நியூசிலாந்து

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் நியூசிலாந்து ஆதிக்கம் செலுத்துகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற இங்கிலாந்து தொடரை ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், ஹமில்டனில் சனிக்கிழமை (14) ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட நியூசிலாந்து, மிற்செல் சான்ட்னெரின் 76, அணித்தலைவர் டொம் லேதமின் 63, கேன் வில்லியம்சனின் 44, வில் யங்கின் 42 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 347 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் மத்தியூ பொட்ஸ் 4, குஸ் அட்கின்ஸன் 3, பிறைடன் கார்ஸ் 2, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, மற் ஹென்றி (4), வில்லியம் ஓ ரூர்க் (3), மிற்செல் சான்ட்னெரிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜோ றூட் 32, ஸ்டோக்ஸ் 27, ஒலி போப் 24, ஸக் குறோலி 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் வில்லியம்சன் 50 ஓட்டங்களுடனும், றஷின் றவீந்திர இரண்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக 60 ஓட்டங்களுடன் யங் ஆட்டமிழந்திருந்தார். பந்துவீச்சில் ஸ்டோக்ஸ் 2, அட்கின்ஸன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.




சிம்பாப்வேக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தான்

சிம்பாப்வேக்கெதிரான இருபதுக்கு  20 சர்வதேசப் போட்டித் தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை சிம்பாப்வேயும், இரண்டாவது போட்டியை ஆப்கானிஸ்தானும் வென்ற நிலையில், ஹராரேயில் சனிக்கிழமை (14) நடைபெற்ற மூன்றாவது போட்டியை ஆப்கானிஸ்தான் வென்ற நிலையிலேயே 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

சிம்பாப்வே: 127/10 (19.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரயான் பென்னிட் 31 (24), வெஸ்லி மட்ஹெவெரே 21 (22), வெலிங்டன் மஸகட்ஸா 17 (15), டியோன் மையர்ஸ் 13 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் கான் 4/27 [4], அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 2/10 [2], முஜீப் உர் ரஹ்மான் 2/20 [4], நவீன்-உல்-ஹக் 2/27 [3.5], மொஹமட் நபி 0/13 [3])

ஆப்கானிஸ்தான்: 128/7 (19.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 34 (37), மொஹமட் நபி ஆ.இ 24 (18), குல்படின் நைப் 22 (22), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 15 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளஸிங்க் முஸர்பனி 2/19 [4], சிகண்டர் ராசா 2/19 [4], ட்ரெவர் குவன்டு 2/30 [4], றிச்சர்ட் நகரவா 1/27 [4], வெலிங்டன் மஸகட்ஸா 0/15 [2])

போட்டியின் நாயகன்: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்

தொடரின் நாயகன்: நவீன்-உல்-ஹக்




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 16, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.